# வணிகவியல் XII Std

## அலகு 02


## அத்தியாயம் 07

# பங்கு மாற்றகம்

Prepared by
S Subramanian
M.Com.M.Phil.B.Ed.
PG  Asst SKV Hr Sec School
Pappunayakkanpatti -625708
Mobile No 9865886179
E.Mail Id.s.subramanian63@gmail.com.

# பங்கு மாற்றகம் ஓர் அறிமுகம்

- பங்கு மாற்றகங்கள் முதலீட்டாளர்களுக்கு சுதந்திரமாக பங்குகளை வாங்கவும் விற்கவும் தேவையான களத்தை வழங்குகிறது.



# பங்கு மாற்றகம் ஓர் அறிமுகம்




- பங்குமாற்றகம் பங்கு சந்தை அல்லது பத்திரச்சந்தை என்றும் அழைக்கப்படுகிறது.


# பங்கு மாற்றகம் தோற்றம்

- ஆம்ஸ்டர்டாம் பங்குச் சந்தை உலகின் மிகப்பழைய பங்கு பரிவர்த்தனை நிலையமாக கருதப்படுகிறது




# பங்கு மாற்றகம் ஓர் அறிமுகம்

- இது 1602ல் டச்சு ஈஸ்ட் இந்தியா நிறுவனம் என்று அழைக்கப்பட்டது.
- இந்தியாவில் முதல் பங்கு பரிவர்த்தனை “தி நேஷனல் பங்குகள் மற்றும் பங்கு தரகர்கள் சங்கம்” ஆகும்




# பங்கு மாற்றகம் ஓர் அறிமுகம்




- இது 1957 ம் ஆண்டு ஆகஸ்ட் 31 ம் நாள் இந்திய பங்குச் சந்தை ஒப்பந்தத்தின் (ஒழுங்குமுறை) சட்டம் 1956 ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டது

# பங்கு மாற்றகம் ஓர் அறிமுகம்

- இது தான் தி பம்பாய் பங்குச் சந்தையாக (The Bombay Stock Exchange) மாறியது.



# பங்கு மாற்றகம் பொருள்

- பங்கு மாற்றகம் என்பது நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட விதிகளோடு பெரு நிறுவனப் பத்திரங்கள் மற்றும் இதர பத்திரங்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் ஏற்படுத்தப்பட்ட சந்தைஆகும்.



# பங்கு மாற்றகத்தின் தேவை




- **01.** சுதந்திரச் சந்தைப் பொருளாதாரத்தில் பங்குப் பரிமாற்றம் அவசியம்.

# பங்கு மாற்றகத்தின் தேவை

- 02.பங்குச் சந்தை ஊக வணிகத்திற்கான இடமாக மாறக்கூடாது.



# பங்கு மாற்றகத்தின் தேவை




- 03.பாதுகாப்பான மற்றும் இலாபகர முதலீட்டிற்கு ஒரு பத்திரச்சந்தை அவசியம்.

# பங்கு மாற்றகத்தின் தேவை

- இவற்றை செயல்படுத்த பத்திரச் சந்தையில் கட்டுப்பாடு தேவை. எனவே பத்திரச் சந்தையை ஒழுங்குபடுத்த பங்கு மாற்றகம் தேவைப்படுகிறது.



# முக்கிய பங்குச் சந்தைகள்


- இலண்டன் பங்குச் சந்தை. உலகின் மிகப் பிரபலமான பங்குச் சந்தை.



# முக்கிய பங்குச் சந்தைகள்

- பாம்பே பங்குச் சந்தை இந்தியாவின் பழமையான பங்குச் சந்தை.



# முக்கிய பங்குச் சந்தைகள்

- டோக்கியோ ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச்
- பேங்க்காகோ ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச்.
- சிங்கப்பூர் பங்குச் சந்தை.



# முக்கிய பங்குச் சந்தைகள்

- துபாய் பங்குச் சந்தை.



- நியூயார்க் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச்.



# பங்குச் சந்தை வரைவிலக்கணம்

- ஹேஸ்டிங்ஸ் கூற்றுப்படி பங்கு மாற்றகம் என்பது வாங்கியவர் மற்றும் விற்பவர் ஒரு இடத்தில் கூடி அனைத்து வகையான பத்திரங்கள், பங்குகளை கையாளும் ஒரு இடமே ஆகும்.



# பங்குச் சந்தை வரைவிலக்கணம்

- பத்திரங்கள் ஒப்பந்தச் (ஒழுங்காற்றுச்) சட்டம் 1956 ன் படி பங்கு மாற்றகம் என்பது பங்குப் பத்திரங்களை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல் அவற்றைச் சீர்படுத்துதல், கட்டுப்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத அமைப்பு சங்கம் அல்லது தனி நபர்களின் அமைப்பாகும்.

# பங்கு மாற்றகத்தின் பணிகள்

- 01.உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை. ஒரு முதலீட்டாளர் தனது பத்திரத்தை எளிதாக விற்க முடியும். அதுபோல் பத்திரத்தை வாங்கவும் முடியும். வாங்குதல் விற்பனை எளிமையாக நடைபெறுவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும்.



# பங்கு மாற்றகத்தின் பணிகள்

- 02.பத்திரங்களின்சரியான மதிப்பீடு.
- பத்திரங்களின் விலைகள் பதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்த விலைகள் ‘சந்தை மேற்கோள்கள்” எனப்படும். இதனால் பத்திரங்களின் மதிப்பை எளிதில் அறியமுடியும்.



# பங்கு மாற்றகத்தின் பணிகள்


- 03. முதலீட்டார்களுக்கு பாதுகாப்பு.
- வரையறுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படுவதால் முதலீட்டார்களுக்கு அவர்கள் மேற்கொண்ட முதலீட்டிற்கு பாதுகாப்பு கிடைக்கும். தரகர்கள் அதிக கழிவு வசூலிக்க முடியாது.



# பங்கு மாற்றகத்தின் பணிகள்


- 04.மூலதனத்தைச் சரியான முறையில் வழிப்படுத்துதல்.
- தனி நபர்களின் சேமிப்பு நன்கு இலாபம் ஈட்டும் நிறுவனங்களுக்கு செல்லும்.





# பங்கு மாற்றகத்தின் பணிகள்

- 05.மூலதன உருவாக்கத்திற்கு உதவி.
- பங்கு மாற்றகம் பத்திர கொள்முதல் மற்றும் விற்பனைக்கு வழங்கும் வசதி காரணமாக மக்களின் சேமிப்பு தொழில் துறை மூலதனத்திற்கு சென்றடைய வாய்ப்பு உள்ளது.



# பங்கு மாற்றகத்தின் பணிகள்

- ０6.பருவகால பத்திரங்கள்.
- புதிய பங்கு வெளியீட்டிற்கு சந்தை வாய்ப்பைத் தருகிறது.



# பங்கு மாற்றகத்தின் பணிகள்

- **07.தொழில் தகவலுக்கான தீர்வகம்.**
- நிறுவனங்களின் பங்காதாய விளம்பல், நிதி அறிக்கைகள், மூலதன மேலாண்மை பற்றிய செய்திகளை பொதுமக்களுக்கு கிடைக்க வகை செய்வதால் முதலீடு பற்றிய முக்கிய முடிவுகளை பொதுமக்கள் எடுக்கமுடியும்.



# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- **01.பத்திரங்களுக்கான சந்தை.**
- நிறுவனங்கள் மற்றும் அரசு வெளியிடும் பத்திரங்களுக்கு சந்தை வாய்ப்பை வழங்குகிறது.



# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- 02.மறு விற்பனை பத்திரங்களுக்கான சந்தை.
- ஏற்கனவே வெளியிடப்பட்ட பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள்,மற்றும் பத்திரங்கள் விற்பனையில் ஈடுபடுகிறது.




# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- 03.பத்திர வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துதல்.
- பங்கு மாற்றகம் தன் சொந்த கணக்கில் பத்திரங்களை வாங்குவதும் விற்பதும் இல்லை. வெளிப்படையான வர்த்தகத்தை உறுதி செய்ய வர்த்தக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகிறது.



# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- 04.பட்டியலிடப்பட்ட பத்திரங்களில் மட்டும் வர்த்தகம்.
- பங்கு மாற்றகம் அலுவல் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் பத்திரங்களை மட்டுமே வாங்கி விற்க அனுமதிக்கிறது.



# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- 05.உறுப்பினர்கள் மட்டும்.
- பங்கு மாற்றகத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தரகர்கள் வாயிலாக மட்டுமே வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- **௦6.தனி நபர்களின் அமைப்பு.**
- பங்கு மாற்றகம் என்பது தனி நபர்களின் அல்லது குழுக்களின் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத அமைப்பாக இருக்கலாம்.




# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- 07.மத்திய அரசின் அங்கீகாரம்.
- மத்திய அரசின் அங்கீகாரம் பெற்று பங்கு மாற்றகம் செயல்படும்.



# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்.

- 08.விதிகளின்படி செயல்படுதல்.
- பத்திரப் பரிவர்த்தனை பங்கு மாற்றகம் மற்றும் செபியின் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களின் படியே நடைபெறும்.




# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- ௦9.குறிப்பிட்ட இடம்.
- குறிப்பிட்ட இடத்தில் வர்த்தகம் நடைபெறுகிறது. இது வர்த்தக வட்டம் எனப்படுகிறது. பங்குச் சந்தை வேலை நேரம் முடிந்தவுடன் சந்தை மூடப்படுகிறது. அனைத்து செயல்களும் மின்னணு முறைமைகள் மூலம் நடத்தப்படுகின்றன.



# பங்கு மாற்றகத்தின் இயல்புகள்

- **10.நிதி அளவீடுகள்.** பங்குச் சந்தைகள் நிதி அளவீடாகளாகவும் நம் பொருளாதாரத்தின் அடையாளமாகவும் இருக்கிறது.



# இந்தியப் பங்குச் சந்தையின் பயன்கள்

01.சமுதாயத்திற்கான பயன்கள்.

02.நிறுவனம் சார்ந்த பயன்கள்.

03.முதலீட்டாளர்கள் சார்ந்த பயன்கள்.



# சமுதாயத்திற்கான பயன்கள்

- **01.பொருளாதார வளர்ச்சி.**
- சேமிப்பை உறுதிப்படுத்துவதால் பொருளாதார வளர்ச்சி துரிதப்படுகிறது.



# சமுதாயத்திற்கான பயன்கள்


- **02.நிதி திரட்டல் தளம்.**
- இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் புதிய பங்கு வெளியீடு மூலம் நிதி திரட்ட உதவுகிறது.



# சமுதாயத்திற்கான பயன்கள்


- **03.வளங்களை மாற்றுதல்.**
- நிறுவனங்கள் செம்மையாக இயங்க வளங்களை பகிர்ந்தளிக்க துணை புரிகிறது.






# சமுதாயத்திற்கான பயன்கள்

- **04.மூலதன உருவாக்கம்.**
- மூலதன உருவாக்கத்தை ஊக்கப்படுத்துகிறது.



# சமுதாயத்திற்கான பயன்கள்

- 05.அரசாங்கத்திற்கான நிதி திரட்டல்.
- பங்கு பரிவர்த்தனை பொது கடன் உயர்த்துவதற்கான ஒரு தளமாக உள்ளது.




# நிறுவனம் சார்ந்த பயன்கள்.

- **01.நிறுவன நன் மதிப்பு உயருதல்.**
- பங்கு மாற்றகங்களில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் நன்மதிப்பு உயரும் நிறுமம் எளிதில் கடன் பெறும்.




# நிறுவனம் சார்ந்த பயன்கள்.

- **02.விரிவான சந்தை.**
- நிறுமப் பங்குகளுக்கு விரிவான சந்தை உள்ளது.



# நிறுவனம் சார்ந்த பயன்கள்.

- 03.பெரும் நிதி திரட்டப்படுதல்.
- பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரம் மூலம் பங்குச் சந்தையில் நிறுமம் எளிதில் பெரும் நிதி திரட்ட முடியும்.


HIMANGINI INFRACON INDIA LIMITED

(An ISO 9001-2008 certified company)

Govt. Registration No. U45400 WB 2010 PLC 153674

Registered under Ministry of Corporate Affairs of India.

Regd. Office :

Sarada Lane, Saharpur, Near A.P.C. College, Kolkata - 700 110

Phone : 2537-7299, Mobile : 9874333208

PRIVATE & CONFIDENTIAL PLACEMENT

On behalf of HIMANGINI INFRACON INDIA LIMITED this is to certify that Fully Secured non-convertible redeemable debentures ("SNCRD") that the person's named in this certificate is/are the registered holder(s) of within mentioned fully secured non-convertible redeemable Debenture bearing the distinctive number(s) here in specified in the above company, subject to the Memorandum and Articles of association of the Company and that the amount endrosed herein has been paid up on each such secured non convertible redeemable Debenture.

*Certificate of Debenture*

Fully Secured Non-Convertible Redeemable Debenture (S.N.C.R.D.)

FACE VALUE OF Rs. 1000/- EACH

Application No. : 003884 Certificate No. : SD/1/0001507

Regd. Folio No. : SD16

Name(s) of holder(s) 01 : DHIRAJ KUMAR DUTTA Age : 46

Name(s) of holder(s) 02 : Age : 0

Address : 96/BPANAGARH TRACTION RAILWAY COLONY, PO- PANAGARH BAZAR, PS- KAKSA

Nominee : SASWATI DUTTA Relation : WIFE

No. of secured non-convertible Redeemable debenture(s) (S.N.C.R.D.) Hold : 100 Date of Commencement : 31/03/2012

Face Value of each SNCRD : 1000 Distinctive No. 439 To 538

Total Face Value : 100,000.00

Redemption Date : 30/03/2015

Redemption Value : 150,000.00 0.00

Given under the seal of the company at Kolkata on this day of : 31/03/2012

HIMANGINI INFRACON INDIA LIMITED

Director

(Managing Director)

# நிறுவனம் சார்ந்த பயன்கள்.

- 04.பேரம் பேசும் வலிமை அதிகரிக்கிறது
- கூடுதல் விரிவாக்கம், இணைப்பு, காரணமாக பேரம் பேசும் சக்தி பெற்று நிறுமப் பங்குகள் விற்பனை எண்ணிக்கை அதிகரிக்கிறது.



# முதலீட்டாளர்கள் சார்ந்த பயன்கள்

- **01.நீர்மைத் தன்மை**.
- முதலீட்டாளர்கள் தங்களது பங்குகளை விரைவாக பணமாக மாற்ற பங்கு மாற்றகம் உதவுகிறது.



# முதலீட்டாளர்கள் சார்ந்த பயன்கள்.

- 02பாதுகாப்பு இணை மதிப்பு சேர்க்கை.
- வங்கிகளில் கடன் வாங்கும் போது பத்திரங்களின் பாதுகாப்பு மதிப்பு சேர்த்துக் கொள்ளப்படுகிறது



# முதலீட்டாளர்கள் சார்ந்த பயன்கள்.

- 03.பங்குப் பத்திரங்களின் உண்மையான மதிப்பை மதிப்பீடு செய்தல்.
- ஒரு முதலீட்டாளர் தன்னிடம் உள்ள பத்திரங்களின் மதிப்பை பத்திரிக்கைகள் மற்றும் வலைதளங்களின் உதவியோடு எளிதாக மதிப்பீடு செய்ய முடியும்.



# முதலீட்டாளர்கள் சார்ந்த பயன்கள்.

- 04.பத்திரங்களின் வியாபாரத்திரற்க்கான கருவி.
- பட்டியலிடப்பட்ட பங்குகளின் வாங்குதல் மற்றும் விற்பனை ஒரு சில நிமிடங்களில் முடிந்துவிடும்.



# பங்கு மாற்றகங்களின் குறைகள்

- 01.பங்கு பரிவர்த்தனையில் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாதது.

In the Next Slide:

"Stock Market fall due to surgical strikes on 26th September, 2016 - Predicted in Advance"

# பங்கு மாற்றகங்களின் குறைகள்

- 02.உறுப்பினர் மீது கட்டுப்பாடு இல்லை.



# பங்கு மாற்றகங்களின் குறைகள்

- 03.ஊகவணிகத்தை கட்டுப்படுத்துவதில் தோல்வி.



# பங்கு மாற்றகங்களின் குறைகள்

- 04. ஒரு இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டணம் வசூலிக்க அனுமதிக்கிறது

Equity - Intraday Brokerage Calculator


| Buy Price | Sell Price | Quantity |
|---|---|---|
| 210 | 210 | 10000 |

NSE BSE MCX-SX

| Maharashtra | % Wise Brokerage 0.05% | ZERODHA Brokerage Rs. 20 Per Trade |
|---|---|---|
| Turnover | 4200000.00 | 4200000.00 |
| Brokerage | 2100.00 | 40.00 |
| STT Total | 525 | 525 |
| SEBI Turnover Fees | 8.4 | 8.4 |
| Stamp Duty | 84 | 84 |
| Exchange Trans. Charges | 136.5 | 136.5 |
| GST | 402.57 | 31.77 |
| Total Tax and Charges | 3256.47 | 825.67 |
| Points to Break Even | 0.33 | 0.08 |
| Net Loss | -3256.47 | -825.67 |

# பங்கு மாற்றகங்களின் குறைகள்

- 05.பங்குகளைப் பட்டியலிட சரியான ஒழுங்குமுறைகள் இல்லை.



# இந்தியாவில் பங்குச் சந்தை

- இந்தியாவில் 24 பங்கு பரிவர்த்தனை நிலையங்கள் உள்ளன.
- 21 பங்கு பரிவர்த்தனை நிலையங்கள் பிராந்திய அமைப்பில் உள்ளன.
- மூன்று பங்கு பரிவர்த்தனை நிலையங்கள் சீர்திருத்த முறையில் உள்ளது. அவையாவன.



# இந்தியாவில் பங்குச் சந்தை

- 01. தேசிய பங்குச் சந்தை (NSE)
- 02.இந்திய உடனடிப் பங்கு மாற்றகம் (OTCEI)
- 03.ஒருங்கிணைந்த இந்திய பங்கு பரிவர்த்தனை லிமிடெட். (ISE) மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒருங்கிணைந்த இந்திய பங்கு பரிவர்த்தனை லிமிடெட் மூலம் 15 பிராந்தியப் பங்குப் பரிவர்த்தனை நிலையங்களை ISE ஊக்குவிக்கிறது.



# உலகின் முதல் 10 பங்குச் சந்தைகள்


| பெயர் | அமைவிடம் | பட்டியலிடப்பட்ட முதலாக்க மதிப்பு *( In Dollars)* |
|---|---|---|
| நியூ யார்க் பங்குச் சந்தை | நியூ யார்க் | 19.223ட்ரில்லியன் |
| NASDAQ | நியூ யார்க் | 6.831 ட்ரில்லியன் |
| இலண்டன் பங்குச் சந்தை | இலண்டன் | 6.187 ட்ரில்லியன் |
| டோக்கியோ பங்குச் சந்தை | டோக்கியோ | 4.485 ட்ரில்லியன் |
| ஷாங்காய் பங்குச் சந்தை | ஷாங்காய்-(சீனா} | 3.986ட்ரில்லியன் |
| யூரோநெக்ஸ்ட் | ஐரோப்பா முழுவதும் | 3.321 ட்ரில்லியன் |
| ஹாங்காங் பங்குச் சந்தை | ஹாங்காய் | 3.325 ட்ரில்லியன் |
| சென்சென் பங்குச் சந்தை | ஷென்சென்—சீனா | 2.285 ட்ரில்லியன் |

# உலகின் முதல் 10 பங்குச் சந்தைகள்

| பெயர் | அமைவிடம் | பட்டியலிடப்பட்ட முதலாக்க மதிப்பு *( In Dollars)* |
|---|---|---|
| TMX குழு | டொராண்டோ-கனடா | 1.939 ட்ரில்லியன் |
| மும்பை பங்குச் சந்தை | மும்பை | 1.682 ட்ரில்லியன் |


# பங்கு மாற்றகத்தில் பங்கு வணிகத்தில் ஈடுபடும் நபர்கள்

- **01.துணைத்தரகர்** பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராக செயல்படுவார். தன் முதல்வருக்காக வியாபாரத்தைப் பெற்று கழிவு பெறுகிறார்.



# பங்கு மாற்றகத்தில் பங்கு வணிகத்தில் ஈடுபடும் நபர்கள்

- 02.அதிகாரமளிக்கப்பட்ட எழுத்தர்.
- தங்களுடைய பணியான்மையரின் (employer) சார்பாக பங்கு மாற்றகத்தின் தளத்தில் தொழில் செய்வதற்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளார் இவர்கள் சம்பளமும் கழிவும் பெறுவர்.




# பங்கு மாற்றகத்தில் பங்கு வணிகத்தில் ஈடுபடும் நபர்கள்

- 03.தரகர்கள்.
- தரகர்கள் கழிவு பெறும்கவர் ஆவர்.
- பத்திரங்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடையே இடைநிலையர்களாக செயல்பட்டு பேரத்தை முடித்து வைப்பார்கள்.
- இருவரிடமும் கழிவு பெறுவர்.




# பங்கு மாற்றகத்தில் பங்கு வணிகத்தில் ஈடுபடும் நபர்கள்

- 04.தன் வணிகர் (Jobbers)
- பங்குத்தொகுதிகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்கி விற்கும் தனிப்பட்ட வியாபாரிகள்.
- இவர்கள் தமக்காக பங்கு வியாபாரத்தில் ஈடுபடுவர்.
- வாங்கிய விலைக்கும் விற்ற விலைக்கும் இடையே உள்ள வேறுபாடே ஆதாயம் ஆகும்.



# ஊகவணிகம்

- பத்திரங்களில் ஏற்படும் விலை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு நிதிசந்தந்தையில் நடைபெறும் வணிகம் ஊகவணிகம் எனப்படும்.



# ஊக வணிகர்களின் வகைகள்

- இந்தியாவில் பங்கு மாற்றகங்களில் நான்கு வகையான ஊகவணிகர்கள் செயல்படுகின்றனர்.
- அவர்கள் காளை கரடி கலைமான் முடவாத்து என அழைக்கப்படுகிறார்கள்







# காளை

- எதிர்காலத்தில் பத்திரங்கள் விலை ஏற்றம் பெறும் என எதிர்பார்க்கின்ற ஊக வணிகர்கள் காளை அல்லது தெஜிவாலா என அழைக்கப்படுகிறார்கள்.
- இவர்கள் எல்லாம் நன்மைக்கே என மனப்பபாங்கு கொண்டவர்.



# கரடி

- கரடி அல்லது மண்டிவாலா என அழைக்கப்படும் ஊகவணிகர்.
- எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலை வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர்.
- தற்போது பங்குகளை விற்று விலை குறையும் போது வாங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.




# கலைமான்.

- முன்னெச்சரிக்கை உடைய ஊக வணிகர்.
- ஒரு நிறுமத்தின் பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் என அறிந்தவுடன் புதிய விடுப்புகளில் விண்ணப்பம் செய்வார்.
- பங்கு ஒதுக்கீடு கிடைத்தவுடன் அவற்றை முனைமம் பெற்றுக்கொண்டு விற்று விடுவர்.
- முனைம வேட்டையாளர் என அழைக்கப்படுவார்



# முடவாத்து

- தற்போதைய தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கும் ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து என் அழைக்கப்படுகிறார்.
- எதிர்கால சந்தையில் ஈடுபடுவதால் சில நேரங்களில் எந்த விலையிலும் வாங்குவதற்கு ஒரு பங்கு கிடைக்காமல் மூலையில் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார்.



# பங்கு பரிவர்த்தனைக்கும் பண்டமாற்று பரிவர்த்தனைக்கும் உள்ள வேறுபாடுகள்

| சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை | பண்டமாற்று பரிவர்த்தனை |
| --- | --- | --- |
| பொருள் | மூலதனச் சந்தையின் அங்கம் | பண்டமாற்று பரிமாற்றம் என்பது பண்டங்கள் வர்த்தகம் செய்யப்படும் சந்தை. |
| பணிகள் | எளிதான சந்தைப்படுத்துதலை வழங்குதல் | பத்திரங்களுக்கு தேவை ஏற்ப்படுத்துதல் |
| நோக்கம் | மூலதன ஆதாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல் | பொருட்கள் விற்பனையை அதிகரித்தல் |
| பங்கேற்பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாபளர்கள், முகவர்கள்,வியாபாரிகள் மற்றும் ஊகவணிகர்கள் |

# பங்கு பரிவர்த்தனைக்கும் பண்டமாற்று பரிவர்த்தனைக்கும் உள்ள வேறுபாடுகள்

| | | |
|---|---|---|
| ஒப்பந்தக்காலம் | ரொக்கம், உடனடி மற்றும் 15 நாட்களுக்கான ஒப்பந்தம் | 2 அல்லது 3 மாதங்கள் கால செலுத்துகை மாற்றம் உடனடி பண ஒப்பந்தங்கள் |
| வர்த்தகம் | பங்குகள் பத்திரங்கள் மற்றும் அரசாங்க பத்திரங்கள் | நீடித்த தரம் வாய்ந்த பொருட்கள் |
| ஊக வணிகம் | நீர்மை மற்றும் தொடர்ச்சியான விற்பனையை உறுதிப்படுத்தும் | நீர்மை மற்றும் தொடர்ச்சியான விற்பனையை உறுதிப்படுத்தும் |

# பங்கு பரிவர்த்தனைக்கும் பண்டமாற்று பரிவர்த்தனைக்கும் உள்ள வேறுபாடுகள்

| | | |
|---|---|---|
| விலை மேற்கோள் | ஒருமுனை விலை மேற்கோள் சாத்தியம் (முன்னோக்கிய ஒப்பந்தம்) | பல முனை விலைமேற்கோள் சாத்தியம் (எதிர்கால ஒப்பந்தம்) |

# தேசிய பங்குச் சந்தை முறை
# National Stock Exchange System

- தேசிய பங்குச் சந்தை ஸ்ரீ எம் ஜே. பெர்வானி தலைமையில் உயர் அதிகாரம் கொண்ட அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டது.
- இந்தியாவில் உள்ள தேசிய பங்குச் சந்தைகள் பின்வருமாறு.



# தேசிய பங்குச் சந்தை முறை
# National Stock Exchange System

- 01. இந்தியாவின் தேசிய பங்குச் சந்தை.
  National Stock Exchange of India Ltd.

- 02. இந்திய பங்கு வைப்பு குழு லிமிடெட்
  Stock Holding and Depository system Ltd

# தேசிய பங்குச் சந்தை முறை National Stock Exchange System

- 03.தேசிய தீர்வை மற்றும் வைப்பு முறை.
  National Clearing and Depository System

- 04.இந்திய பங்கு பத்திரங்கள் விற்பனை கழகம்.
  Securities Trading Corporation of India

# இந்தியாவின் தேசிய பங்குச் சந்தை.
## National Stock Exchange of India Ltd


- இது 1992 ல் துவக்கப்பட்டது. இந்தியாவில் கணினி தகவல் தொடர்பின் மூலம் பங்குகளை பரிந்துரைக்கப்பட்ட விலையில் வாங்குதல் மற்றும் விற்பனை செய்வதற்க்கான உறுப்பினர்களின் ஆணைகள் கணினி மூலம் தெரிவிக்கப்படுகின்றன.



# இந்தியாவின் தேசிய பங்குச் சந்தை.
## National Stock Exchange of India Ltd

- இது இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது
- .01. கடன் பிரிவு
- 02.மூலதன பிரிவு




# இந்திய பங்கு வைப்புக் கழகம் வரையறுக்கப்பட்டது

- 1986 ல் ஏற்படுத்தப்பட்டது பங்கு விற்பனையை விரைவு படுத்தவும் தீர்வைகள் மற்றும் அது தொடர்பான சேவைகளை விரைவுபடுத்துவதுமே இதன் நோக்கம்.



# தேசிய தீர்வைகள் மற்றும் வைப்பு அமைப்பு

- பங்கு மாற்றகங்கள் அமைப்பு மற்றும் தீர்வைகள் முகமை அமைப்புகளின் பணிச்சுமை காரணமாக ஏற்படும் தவறுகளை சரிசெய்வதர்க்காகவும் விரைவாக பிரச்சினைகளை தீர்ப்பதர்க்காவும் ஏற்படுத்தப்பட்டதே இந்த அமைப்பு ஆகும்.



# இந்திய பத்திரங்கள் வர்த்தக கழகம்.

- 1994 ம் ஆண்டு இந்திய ரிசெர்வ் வங்கியால் நிறுமச்சட்ட விதிகளின்படி தோற்றுவிக்கப்பட்டது.
- பொதுத்துறை நிறுவனங்கள் இரண்டாம் நிலைச் சந்தையில் அரசுப் பத்திரங்கள் மற்றும் நிறுவனப் பத்திரங்களின் விற்பனை செயல்திறனை விரைவுபடுத்துவதற்க்காக தோற்றுவிக்கப்பட்டது.



# இந்திய பத்திரங்கள் வர்த்தக கழகம்

- இதன் செலுத்தப்பட்ட மூலதனம் 500 கோடி.
- இதில் இந்திய ரிசெர்வ் வங்கியால் 50.18% வழங்கப்பட்டுள்ளது.



# தேசிய பத்திர வைப்பகங்கள் வரையறுக்கப்பட்டது

- 1996ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வைப்புச் சட்டத்தை இயற்றி இந்த அமைப்பை தோற்றுவித்தது.
- 1996ம் ஆண்டு டிசம்பர் 26ம் நாள் காகிதமில்லா பத்திரங்கள் விற்பனையை தேசிய பங்கு பரிமாற்றகம் தொடங்கியது.






# தேசிய பத்திர வைப்பகங்கள் வரையறுக்கப்பட்டது

- இது பங்கு பரிவர்த்தனையில் புதிய சகாப்தம்.
- 1997ம் ஆண்டு டிசம்பர் 29ம் நாள் முதல் காகிதமில்லா பங்கு பரிவர்த்தனையை மும்பை பங்குச் சந்தை தொடங்கியது.




# நிப்டி விளக்கம் NIFTY

- NIFTY என்ற ஆங்கில வார்த்தை National மற்றும் FIFTY என்ற வார்த்தைகளை அடிப்படையாகக் கொன்டது.
- இந்தியாவின் 50 முக்கிய நிறுவனங்களின் பங்கு வணிகத்தைக் குறிப்பதாகும்.
- தேசிய பங்குச் சந்தையின் குறியீடாக உள்ளது.


# சென்செக்ஸ் SENSEX

- சென்செக்ஸ் என்பது மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் குறியீடாக உள்ளது.
- பட்டியலிடப்பட்ட 30 பெரிய நிறுவனப் பங்குகளையும் BSEன் மொத்தப் பங்குகளையும் கணக்கில் கொண்டு குறியீடு கணக்கிடப்படுகிறது.
- BSE 30பங்குகள் கொண்ட ஒரு கட்டமைப்பு.



# இந்திய பங்குச் சந்தைகளின் நேரம்

- பங்குகளுக்கான வர்த்தக நேரம் காலை 9.15 முதல் பிற்பகல் 3.30 வரை இருக்கும்.
- சனி,ஞாயிறு மற்றும் தேசிய விடுமுறை நாட்களில் பங்குச் சந்தைகள் மூடப்படும்.



# இந்திய பங்குச் சந்தைகளின் நேரம்

- பொருட்கள் சந்தைக்கான நேரம் காலை 10 முதல் 11.30 வரை.
- விவசாயப் பொருட்களுக்கான சந்தை நேரம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10 மணி முதல் பிற்பகல் 5 மணி



# இந்திய பங்குச் சந்தைகளின் நேரம்

- உணவு இடைவேளை, தேநீர் இடைவேளை கிடையாது.
- இந்தியப் பங்குச் சந்தைகளின் நேரம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது



# இந்திய பங்குச் சந்தைகளின் நேரம்

- 01.சாதாரண அமர்வு
- 02.முன் தொடக்க அமர்வு
- 03.பிந்தைய திறப்பு அமர்வு



# விருப்பச் சந்தை (Optional Market)

- விருப்பச் சந்தை என்பது ஒரு குறிப்பிட்ட விலையில் குறிப்பிட்ட காலத்திற்குள் பங்குகளை வாங்கி விற்பனை செய்யும் ஒரு பாதுகாப்பான சந்தை முறை ஆகும்.




# லெவரேஜ் (Leverage)

- பங்குகளை வாங்குவதன் மூலம் அதனை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே லெவரேஜ் ஆகும்.



# ஏற்படுத்துதல் (Hedging)

- முன் தீர்மானிக்கப்பட்ட விலையில் பங்குகள் வாங்கவோ விற்கவோ அனுமதிப்பது ஏற்படுத்துதல் ஆகும்.



# தலால் தெரு.

- தலால் என்ற வார்த்தைக்கு மராத்தி மொழியில் தரகர் அல்லது இடைத்தரகர் என்று பொருள்.
- மும்பை மையப் பகுதியில் இருக்கும் தலால் தெருவில் மும்பை பங்குச் சந்தை உள்ளது.



# தலால் தெரு.

- 1874 ம் ஆண்டு மும்பை பங்குச் சந்தை இங்கு இடம் பெயர்ந்த பிறகே தலால் தெரு எனப் பெயர் ஏற்பட்டது.

